# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ்
## பள்ளிவாயிலில் 06.04.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் அதிகாரம் ஆலி இம்ரானின் 170 முதல் 174 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்:**

*இந்த வசனங்களின் பொருள்: எவர்கள் அல்லாஹ்வின் வழியில் கொல்லப்படுகின்றார்களோ அவர்களை ஒருபோதும் மரணித்தவர்கள் என்று எண்ணாதீர்கள். மாறாக, அவர்கள் தங்கள் இறைவனிடம் உயிருள்ளவர்கள். அவர்களுக்கு அவர்களது இறைவனிடமிருந்து ரிஸ்க் வழங்கப்படுகிறது. அல்லாஹ் தனது அருளால் அவர்களுக்கு வழங்கியதில் அவர்கள் பெருமகிழ்ச்சி அடைகின்றனர். தங்களுக்கு பின்னால் இருப்பவர்கள் தொடர்பாக அவர்கள் நற்செய்தியினைப் பெறுகின்றனர். அவர்கள் இதுவரை அவர்களை சந்திக்கவில்லை. அவர்கள் மீது எவ்வித அச்சமும் இருக்காது. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள. அவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகள், அவனது அருள் தொடர்பான நற்செய்திகளைப் பெறுகின்றனர். அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்குரிய கூலியை வீணாக்கமாட்டான் என்ற நற்செய்தியையும் அவர்கள் பெறுகின்றனர்.*

*எவர்கள் காயமடைந்த பிறகு அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் அழைப்பிற்கு செவிசாய்த்தனரோ அப்படிப்பட்டவர்களில் எவர்கள நன்மை செய்து இறையச்சத்தை மேற்கொண்டார்களோ அவர்களுக்கு மிகப்பெரும் நற்கூலி இருக்கிறது. அவர்களிடம் எதிரிகள் உங்களுக்கு எதிராக மக்கள் ஒன்றுதிரண்டுள்ளனர். எனவே, அவர்களுக்கு அஞ்சுங்கள் என்று கூறியது அவர்களை அவர்களது ஈமானிலும் மேலும் அதிகரிக்கச் செய்தது. அதற்கு அவர்கள் எங்களுக்கு அல்லாஹ்வே போதுமானவன். அவன் எவ்வளவு சிறந்த பாதுகாவலன் என்று கூறினர். (3:170-174)*

குறிப்பாக பாகிஸ்தானிலும் அதன் தாக்கத்தின் கீழ் வந்த மற்ற சில நாடுகளிலும் முல்லாக்களும் அரசாங்கமும் அஹ்மதிகளுக்கு எதிராக சட்டம் இயற்றி அவர்களை குடிமகன் என்ற நிலையில் அவர்களுக்கு இருக்கும் உரிமையிலிருந்து விலக்கி வைத்து மனித உரிமைகள் தொடர்பாக இருக்கின்ற ஒவ்வொரு சட்டத்தையும் மறைத்து விட்டு அவர்களை தீவிரவாதத்திற்கு இலக்காக்கி அஹ்மதிகளை கொலை செய்வதற்கு ஒவ்வொருவருக்கும் முழுமையான சுதந்திரத்தை வழங்கி, இவர்கள் அஹ்மதிய்யத்தை அழித்து விடலாம் என்று நினைக்கின்றனர். ஆனால், இது அவர்களது தவறாகும். ஆனால் அஹ்மதிய்யத் இறைவனால் நடப்பட்ட செடியாகும். அதனை எந்த மனித முயற்சியும் அழித்து விட முடியாது. அது மலர்வது தொடர்பாகவும் கனிகள் தருவது தொடர்பாகவும் இறைவன் நற்செய்தி வழங்கியுள்ளான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வந்த ஓர் இல்ஹாமில் இறைவன் அவர்களை நோக்கி இவ்வாறு கூறுகின்றான்:**

**எனது அஹ்மதே! உமக்கு நற்செய்தி! நீ எனது நோக்கமாக இருக்கின்றாய். மேலும் நீ என்னுடன் இருக்கின்றாய். நான் எனது கைகளால் உனது மரத்தை நட்டுள்ளேன்.**

எனவே, ஜமாஅத்தை அழிப்பதற்கான மனித முயற்சிகள் தான் இவை என்பதில் சந்தேகமில்லை. அவ்வாறு இனியும் முயற்சி செய்யப்படும். ஆனால் இந்த முயற்சிகளால் அஹ்மதிய்யா ஜமாஅத் அழிந்து விடாது. இந்த இல்ஹாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறங்கிய போது அவர்களுடன் சில மக்கள்தான் இருந்தன். அந்த மக்கள் அவர்களிடம் பைஅத் செய்யும் நற்பாக்கியத்தைப் பெற்றனர். இன்று அல்லாஹ்வின் வாக்குறுதி நிறைவேறி இருப்பதை நாம் எந்த அளவு மகிமையுடன் பார்க்கின்றோம். அஹ்மதிய்யா ஜமாஅத் உலகிலுள்ள 200 நாடுகளில் பரவிவிட்டது. எத்தகைய தூய உள்ளம் கொண்டவர்களின் ஜமாஅத் நிலைநாட்டப்பட்டு விட்டது என்றால் அதை பார்க்கும் போது வியப்பாக இருக்கின்றது. எதிரிகள் எல்லா

வகையிலும் முயற்சி செய்த பிறகும் அதில் அரசாங்கங்கள் ஈடுபட்ட பிறகும் அந்த ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரை ஜமாஅத்திற்கு கிடைத்துள்ள முன்னேற்றம் மனித முயற்சிகளால் கிடைக்குமா? ஒருவரது அறிவிலும் கண்களிலும் காழ்ப்புணர்ச்சியின் திரை இல்லாமல் இருந்தால் இந்த ஒரு விஷயமே அஹ்மதிய்யத்தின் உண்மைக்கு போதுமான சான்றாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இந்த விஷயத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். சில மக்கள் எழுந்து எங்களுக்கு கனவில் அல்லது எங்களுக்கு கிடைத்த இறை அறிவிப்பில் இறைவன் எங்களிடம் மிர்ஸா சாஹிப் பொய்யர் என்று கூறியுள்ளான் என்று கூறுகின்றனர். இவ்வாறு கூறுகின்ற மாற்று மதத்தவர்களின் உதாரணங்களையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். அவர்களும் எங்களுக்கு இறைவன் இவ்வாறு கூறியுள்ளான் என்றே கூறியிருக்கின்றார்கள். அதாவது அவர்களது மார்க்கம் உண்மையானது என்றும் இஸ்லாம் நவூதுபில்லாஹ் பொய்யான மார்க்கம் என்றும் இறைவன் அவர்களிடம் கூறியதாக அவர்கள் கூறுகின்றனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஆனால், எண்ணற்ற மக்கள் உள்ளனர். அவர்கள் பைஅத் செய்தனர். எங்களுக்கு இறைவன் இதை கூறினான்; எங்களுக்கு வழிகாட்டினான் என்று கூறி அவர்கள் இவ்விஷயத்திற்கு சாட்சிகளாக இருக்கின்றனர். அதாவது இந்த நபர், நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கின்றேன் என்ற தமது வாதத்தில் உண்மையாளர் என்பதை இறைவன் அவர்களுக்கு தெரிவித்துள்ளான்.

இன்றும் கூட கனவுகளின் மூலம் கிடைத்த வழிகாட்டல் மூலமாக நூற்றுக்கணக்கில் பைஅத்துகள் நடக்கின்றன. இந்தக் காலத்தில் நாம் அனைவரும் இதற்கு சாட்சிகளாக இருக்கின்றோம். அது தொடர்பான சம்பவங்களை நான் எடுத்துக் கூறியுள்ளேன். இன்றும் கூட எனக்கு முன்னால் இப்படிப்பட்ட நபர்கள் உள்ளனர். அவர்களுக்கு அல்லாஹ்வே வழிகாட்டினான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனை விளக்கிக் கூறியுள்ளார்கள். வேறு ஓர் இறைவன் இருக்க முடியாது. ஒருவருக்கு ஒரு விஷயத்தையும் இன்னொருவருக்கு வேறொரு விஷயத்தையும் கூறுபவர்களாக இறைவன் இருக்க முடியாது. இதற்கு ஓர் அளவுகோல் இருக்கின்றது. இந்தவொரு அளவுகோலின்படி இதை பிரித்தறிய விரும்பினால் அவரால் அதை செய்ய முடியும். இந்த ஒரு அளவுகோல் மட்டுமே அதற்கு பொருந்தும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த அளவுகோல் என்ன என்பதை நான் உங்களுக்கு கூறுகின்றேன். அல்லாஹ்வின் செயல் என்ன கூறுகின்றது என்று பார்க்க வேண்டும். கனவுகளை இவர்களும் பார்க்கின்றார்கள். அவர்களும் பார்க்கின்றார்கள். ஆனால் இறைவனது செயல் என்ன கூறுகின்றது என்பதை பாருங்கள். இதை நீங்கள் பார்த்தால் ஜமாஅத்தின் முன்னேற்றமானது அல்லாஹ்வின் செயல் அளவிலான சாட்சியாக அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் இருக்கின்றது என்பதை நீங்கள் கண்டு கொள்வீர்கள்.

இன்று கிலாஃபத்தின் கைகளில் அஹ்மதிய்யா ஜமாஅத் ஒன்றுசேர்வது அல்லாஹ்வின் ஒரு மிகப்பெரும் செயல் அளவிலான சாட்சியாக இருக்கின்றது. சுயநலமின்றி உயிர், பொருள், நேரம் ஆகியவற்றை அவர்கள் தியாகம் செய்வதை ஜமாஅத்தைச் சாராத மற்றவர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். இது அல்லாஹ்வின் செயல் அளவிலான சாட்சியாக அவர்களுக்கு இல்லையா? அந்த அல்லாஹ் உள்ளங்களை உறதியாகப் பிணைத்து ஓரிடத்தில் அவற்றை ஒன்றுசேர்த்துள்ளான். உலக மக்கள் இழைக்கும் கொடுமைகளை அவர்கள் தொடர்ந்து சகித்துக் கொண்டே இருக்கும் நிலையிலும் கூட அவர்களை இறைவன் இந்த தியாகங்களைச் செய்ய வைத்துள்ளான். இந்த நிலை பரவிக் கொண்டிருப்பதும் அதில் முன்னேறுவதும் எதிரிகளின் முயற்சியால் நின்றுவிட முடியாது. அஹ்மதிய்யத்திற்காகவும் கலிமா தய்யிபாவிற்காகவும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது கொண்டுள்ள பேரன்பின் காரணத்தாலும் முழுக்க முழுக்க இறைவனுடைய அடியாராக மட்டும் ஆவதற்காகவும் அர்ப்பணமாகின்ற ஒவ்வொரு உயிரும், உங்களது சூழ்ச்சியும், உங்களது முயற்சியும், நீங்கள் இழைக்கின்ற கொடுமைகளும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின்

முன்னேற்றத்தை தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை அறிவிக்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் ஹஸ்ரத் மவ்லவி அப்துர் ரஹ்மான் கான் சாஹிப் ஷஹீது, ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீப் சாஹிப் ஷஹீது ஆகியோரின் ஷஹாதத்துகளின் மூலமாக உயிரைத் தியாகம் செய்வது ஆரம்பமானது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் சாஹிப்ஸாதா சாஹிப் அவர்களின் ஷஹாதத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறினார்கள்:

ஷஹீது மர்ஹூம் அவர்கள் மரணமடைந்து எனது ஜமாஅத்திற்கு ஒரு முன்மாதிரியைத் தந்துள்ளார்கள. உண்மையில் எனது ஜமாஅத்திற்கு ஒரு பெரும் முன்மாதிரி தேவைப்பட்டது.

**பிறகு தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள். ஜமாஅத் சகோதரர்களில் உண்மையான உள்ளத்துடன நம்பிக்கை கொண்டவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் உண்மையான உள்ளத்துடன் இதனை ஏற்றுக் கொண்டனர். இந்த வழியில் ஒவ்வொரு துக்கத்தையும் ஏற்றுக் கொள்ள அவர்கள் தயாராக இருக்கின்றார்கள்.

ஆனால் எத்தகைய முன்மாதிரியை இந்த வீரமிக்க ஆண் மகன் (அதாவது சாஹிப்ஸாதா சாஹிப் அவர்கள்) வெளிப்படுத்திக் காட்டினார்களோ அதுபோன்ற ஆற்றல்கள் இதுவரை இந்த ஜமாஅத்தில் மறைந்திருக்கின்றன.

கூறுகின்றார்கள்: அல்லாஹ் எல்லாருக்கும் அந்த ஈமானைக் கற்றுத் தருவானாக! உறுதியாக நிலைத்து நிற்கும் தன்மையை வழங்குவானாக! அதற்கான முன்மாதிரியைத்தான் இந்த ஷஹீது மர்ஹூம் காட்டியுள்ளார்கள்.

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த துஆவை ஏற்றுக் கொண்டான். அப்படிப்பட்ட உறுதியாக நிலைநிற்கும் தன்மையை பலருக்கும் அவன் வழங்கியுள்ளான். அதன் காரணமாக அதற்கான நேரம் வந்த சமயத்தில் அவர்கள் தங்கள் உயிர்களின் காணிக்கையை வழங்கினர்.

ஆரம்ப காலத்தில் தியாகம் செய்த அந்த ஷஹீதுகளின் தியாகங்களின் தொடரை எல்லாரையும் விட அதிகமாக பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகள் நீடித்திருக்கும்படி செய்துள்ளனர். நூற்றுக்கணக்கான மக்கள் இதற்காக தியாகங்களைச் செய்தனர். ஒவ்வொரு ஷஹீதும் தனது ஈமானின் வெப்பம் மற்றும் உறுதியாக நிலைநிற்கும் தன்மை ஆகியவற்றை வெளிப்படுத்தினார். அஹ்மதிய்யத்திற்காக ஷஹீதான ஒவ்வொருவரும் அவருக்கென்று ஒரு நிறத்தை உடையவராக இருந்தார். அத்துடன் அவர் தனது உயிரின் காணிக்கையை வழங்கினார். இதில் இந்தோனேஷியாவிலுள்ள ஷஹீதுகளும் அடங்குவர். இந்தியாவிலுள்ள ஷஹீதுகளும் இன்னும் பிற நாடுகளிலுள்ள ஷஹீதுகளும் அடங்குவர். ஆனால் இவர்களில் சிலர் மிகுதியான சிறப்பைப் பெற்றுள்ளனர். 1974 ஆம் ஆண்டில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக நடந்த கிளர்ச்சியில் 30 அல்லது 35 அஹ்மதிகள் ஷஹீதானார்கள்.

ஆனால், சிலர் எப்படிப்பட்ட நிலையில் ஷஹீதானார்கள் என்றால் அவர்களில் சிலருக்கு கடுமையான கொடுமைகள் இழைக்கப்பட்டு அவர்கள் ஷஹீதாக்கப்பட்டனர். தந்தையையும், மகனையும் ஷஹீதாக்கினார்கள். தந்தைக்கு முன்னால் மகனுக்கு கொடுமைகள் இழைக்கப்பட்டன. மகனுக்கு முன்னால் தந்தைக்கு கொடுமைகள் இழைக்கப்பட்டு நீங்கள் அஹ்மதிய்யத்தை விட்டும் தவ்பா செய்வீர்களா? செய்யமாட்டீர்களா? என்று கேட்கப்பட்டது. இந்த எல்லாவற்றையும் மக்கள் மட்டும் செய்யவில்லை. மாறாக அங்குள்ள காவல்துறை இவற்றை முன்னால் நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது. இந்தோனேஷியாவில் பொதுமக்களுக்கு முன்னால் காவல் துறையினரின் கண்காணிப்புடன் தீவிரவாதத்திற்கு இலக்காக்கி காவல்துறை மற்றும் அந்த பிரதேசத்தைச் சார்ந்த அஹ்மதிகளின் கண்காணிப்பில் கொடுமைகள் இழைக்கப்பட்டு அஹ்மதிகள் ஷஹீதாக்கப்பட்டனர். ஆனால், ஈமானை பாதுகாப்பவர்களாகவும் உறுதியாக நிலைநிற்கும் தன்மையின் வடிவமாகவும் திகழ்ந்த இவர்கள் தங்கள்

உடலின் ஒவ்வொரு இன்ச்சிலும் காயமடைந்த நிலையில் இருந்தனர். ஆனால் தங்களது ஈமானை இழக்க அவர்கள் விடவில்லை.

இது பாகிஸ்தானின் சட்டமாக இருந்தாலும் சரி, இந்தோனேஷியாவின் சட்டமாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த நாட்டின் சட்டமாக இருந்தாலும் சரி இந்த சட்டத்தின் மூலமாக அவர்கள அஹ்மதிகளின் வாழ்க்கையை வேண்டுமானாலும் பறித்து விடலாம். ஆனால், ஜமாஅத் மீது அவர்களுக்கு இருக்கும் ஆழ்ந்த பற்றை பறிக்க முடியாது.

இப்போது மலேசியாவும் ஒரு புது சட்டத்தின் மூலம் கடினம் காட்டுகிறது என்று கேள்விப்படுகிறோம். அவர்களும் ஒரு புது சட்டத்தை உருவாக்கி இருக்கின்றார்கள். அது இப்போது வெளிப்படுகிறது. இவர்களும் இதை சோதித்துப் பார்க்கட்டும்.

ஆனால், இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எப்போது இறைவனின் விதி தனது செயலை ஆரம்பிக்குமோ அப்போது கணக்கு தீர்ப்பது கஷ்டமானதாக ஆகிவிடும். பிறகு எந்த முல்லாவும் எந்த சட்டமும் இவர்களை காப்பாற்ற முன் வராது. மாறாக, ரஹ்மத்துல் ஆலமீன் (ஸல்) அவர்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் இழிவான முயற்சிகளைச் செய்கின்ற இந்த பெயர்தாங்கி ஆலிம்கள்தான் குற்றவாளிக் கூண்டில் முதலில் ஏற்றப்படுவார்கள். மேலும் அஹ்மதிகளின் ஈமான், பொறுமை, உறுதியாக நிலைநிற்கும் தன்மை ஆகியவை ஓர் மகிமையுடன் பிரகாசித்துக் கொண்டிருக்கும். எனவே, அஹ்மதிகளுக்கு இந்த விஷயத்தில் கவலை இல்லை. இறுதியில் அவர்களுக்கு தான் வெற்றி கிடைக்கும் என்பது அவர்களுக்கு தெரியும். சமுதாயங்கள் தியாகங்களைச் செய்கின்றது. அஹ்மதிகளும் தியாகங்கள் செய்கின்றனர். ஆனால் இவர்களது இந்த தியாகங்களின் நோக்கம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதாக இருக்கின்றது.

எனவே, அஹ்மதிகள் செய்கின்ற இந்த தியாகங்கள், இதற்கு முன்னரும் அவர்கள் தியாகங்கள் செய்து வந்தனர். எதிர்காலத்திலும், அவர்கள் தியாகங்களைச் செய்வார்கள். இவை அனைத்தும் எவ்வித நோக்கமும் இல்லாமல் செய்யப்படுகின்ற சாதாரண தியாகங்கள் அல்ல. நான் ஏற்கனவே கூறியதுபோன்று பாகிஸ்தானில் எல்லாவற்றையும் விட அதிகமாக கொடுமை மற்றும் காட்டுமிராண்டித்தனத்தை வெளிப்படுத்துகின்ற சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. அரசாங்கத்திலுள்ள முக்கிய பொறுப்புகளில் உள்ளவர்கள் என்ன வேண்டுமானாலும் கூறட்டும். ஆனால், அந்தந்த பகுதிகளிலுள்ள பொறுப்பிலுள்ள அதிகாரிகள் தங்களது கண்காணிப்பில் இந்த தீவிரவாத செயல்களை செய்து வருகின்றார்கள். இவர்களின் இந்த தீவிரவாத செயல்கள் இன்னும் அஹ்மதிகளை இவர்களது கொடுமைகளும் காட்டுமிராண்டித்தனத்திற்கும் இலக்காக்கிக் கொண்டிருக்கின்றது.

கடந்த சில நாட்களுக்கு முன் ரப்வாவிலுள்ள காவல்துறையைச் சேர்ந்தவர்கள் அதாவது இவர்களில் அந்த காவல் நிலையத்தின் இன்சார்ஜும் அவரது Assistant ம் நமக்கு கிடைத்த தகவலின்படி இவர்களுக்கு மேலுள்ள ஒரு அதிகாரியும் சேர்ந்து நமது மிகுந்த தூய அர்ப்பணிக்கும் தன்மையைக் கொண்ட ஓர் அஹ்மதி சகோதரரை அவர் மீது எந்த வழக்கும் பதிவு செய்யாமலேயே ஒரு மாத காலம் வரை காவல் நிலையத்தில் வைத்திருந்தனர். பிறகு அவரை யாரும் அறியாத ஒரு இடத்திற்கு கொண்டு சென்று 8 அல்லது 10 நாட்கள் வரை அவரை கடுமையான கொடுமைகளுக்கு இலக்காக்கி உள்ளனர். அதன் விளைவாக இந்த தூய அர்ப்பணிக்கும் தன்மையைக் கொண்ட அப்துல் குத்தூஸ் என்ற பெயருடைய இந்த அஹ்மதி சகோதரர் பொறுமையுடனும், உறுதியாக நிலைநிற்கும் தன்மையுடனும் இந்த Torture யும், துன்பங்களையும் சகித்தவாறு தனது இறைவன் முன்னால் ஆஜராகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

அவர் ஷஹாதத்தின் இந்த உயர் தகுதியைப் பெற்று விட்டார். இந்த சம்பவத்தை விரிவாக இப்போது கூறுகின்றேன்.

ரப்வாவிலுள்ள நுஸ்ரத் ஆபாத் என்ற முஹல்லாவில் வசித்து வந்த பதிவுத்தாள்களை விற்று வந்த அஹ்மது ஹுஸைன் என்பவர் நீதிமன்ற வளாகத்தில் Stamp Paper –களை விற்று வந்தார். இவரை கடந்த அக்டோபர் மாதம் 4 மற்றும் 5 ஆம் தேதிக்கு இடைப்பட்ட இரவில் எவரோ கொலை செய்து விட்டார். பிறகு

காவல்துறை கொலை செய்யப்பட்டவரின் மகள் கூறியதற்கேற்ப பல நபர்களை பல்வேறு சமயங்களில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்து விசாரனை நடத்தி வந்தது. பிறகு இவ்வாறு பிடிக்கப்பட்ட எல்லா நபர்களையும் குற்றமற்றவர்கள் என்று கூறி அவர்களை விடுதலை செய்தது. வாதியான கொலை செய்யப்பட்டவரின் மகன் இந்த விஷயம் தொடர்பாக மாஸ்டர் அப்துல் குத்தூஸ் சாஹிப் ஷஹீது அவர்களின் பெயரையும் கூறியிருந்தார். இதனால் காவல்துறை அவரையும் காவல்நிலையத்திற்கு அழைத்து அவரைப் பிடித்து வைத்திருந்தது. இவர் நுஸ்ரத் ஆபாத் முஹல்லாவின் ஜமாஅத் தலைவராக இருந்தார். இவ்வாறு இந்த வழக்கில் எவ்வித காரணமுமின்றி மாஸ்டர் அப்துல் குத்தூஸ் சாஹிபின் பெயரைக் கூறி அவர் மீது இந்தக் குற்றம் சுமத்தப்பட்டது. பிறகு எழுத்து வடிவில் குற்றம் சுமத்தியவர் தனது விண்ணப்பத்தை D.P.O.விற்கு அனுப்பினார். போலீஸ் மாஸ்டர் சாஹிப் அவர்களை பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி மக்ரிப் தொழுகை நேரத்தில் பள்ளிவாசலுக்கு வந்து கைது செய்தது. போலீஸ் அவரைப் பிடித்துக் கொண்டு சென்றாலும் முறையாக கைது செய்வதற்காக பிறப்பிக்கப்படும் எந்தவொரு ஆணையையும் அவர்கள் பதிவு செய்யவில்லை. காவல்துறையை தொடர்பு கொண்டபோது தொடர்ந்து அவர்கள், இவரும் குற்றமற்றவர் என்பது எங்களுக்கு தெரியும் என்றே கூறி வந்தனர். பெரிய அதிகாரிகளும் இதையே கூறி வந்தனர். விரைவாக இந்த பிரச்சனை தீர்வுக்கு வந்து விடும். தவிர்க்க முடியாத சில விஷயங்கள் உள்ளன. வேறு வழியில்லாமல் அவரை காவலில் வைத்துள்ளோம் என்றெல்லாம் கூறினர். இந்நிலையில் கடந்த மார்ச் மாதம் 17 ஆம் தேதி மாஸ்டர் அப்துல் குத்தூஸ் சாஹிப் அவர்களை காவல்துறை ரப்வா காவல் நிலையத்திலிருந்து எவரும் அறியாத ஓரிடத்திற்கு கொண்டு சென்றனர். மாஸ்டர் சாஹிப் அவர்களுக்கு நாம் எங்கே வைக்கப்பட்டுள்ளோம் என்று எதுவுமே தெரியாமல் இருந்தது. இவரை மறைத்துக் கொண்டு சென்று பத்து நாட்கள் கழிந்த பிறகு மார்ச் 26ம் தேதி போலீஸ் இவரை மீண்டும் காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தது. மேலும் மாஸ்டர் சாஹிபின் ஒரு நண்பருக்கு போன் செய்து உங்களது ஆளை கொண்டு செல்லுங்கள் என்று அவர்கள் கூறினார்கள். இதைக் கேட்ட அவர்களது நண்பர் அங்கு சென்றனர். மாஸ்டர் சாஹிப் என்னை இங்கிருந்து அழைத்துச் செல்லுங்கள் என்று கூறினார்கள். அப்போது போலீஸ் ஒரு வெற்றுக் காகிதத்தில் அவரிடம் கையெழுத்து போடும்படி கூறி அதையும் வாங்கி வைத்துக் கொண்டது. நான் இவரை திரும்ப அழைத்துச் செல்கின்றேன் என எழுதி வாங்கிக் கொண்டு மாஸ்டர் சாஹிபை அவரது நண்பரிடம் ஒப்படைத்தது. மாஸ்டர் அப்துல் குத்தூஸ் சாஹிப் அவர்களின் நிலைமை சரியில்லாமல் இருந்தது. எனவே அவர்களது நண்பர் அவரை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு சென்ற பிறகு அவருக்கு தெரிய வந்தது. என்னவென்றால் போலீஸ் அவரை மறைத்துக் கொண்டு சென்ற பிறகு முதல் 3 நாட்கள் அவரை மிகவும் அதிகமாக கொடுமைக்கு ஆளாக்கி இருக்கின்றது. இதன் காரணமாக அவரது நிலைமை மோசமாகி விட்டது. அவர்களுக்கு மலம் கழிக்க செல்லும் போதும் இரத்தம் வந்து கொண்டிருந்தது. இரத்த வாந்தியும் அவர்கள் எடுத்தார்கள். மேலும் இவரது சிறுநீரகங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தன. மாஸ்டர் சாஹிபை சந்தித்த சமயத்தில் அவர் கூறினார். மார்ச் மாதம் 17ம் தேதி இரவு இந்த சம்பவம் நடந்தது. அப்போது அவருக்கு சுய நினைவு இருந்தது. ஆனால் கடுமையான உள் காயம் ஏற்பட்டிருந்தது.

அவர் கூறினார்: மார்ச் 17ம் தேதி இரவு இருளில் 5 அல்லது 6 மணி நேரம் டிரைவிங் செய்தவாறு போலீஸ் ரப்வா காவல் நிலையத்திலிருந்து அவரை யாரும் அறியாத ஓரிடத்திற்கு அழைத்துச் சென்றது. வழிப்பாதையிலிருந்த ரோடும் மோசமாக இருந்தது. முற்றிலும் பாழடைந்த ஓரிடத்திற்கு அவரை அழைத்துச் சென்று மிகவும் அதிகமாக அவர் மீது கொடுமையிழைத்தனர். காவல்துறையினர் அவரை பலமுறை அடித்து இந்தக் கொலையில் ஈடுபட்ட ஏதாவதொரு பொறுப்பாளரின் பெயரைக் கூறு என்று சொல்லிக் கொண்டேயிருந்தனர். நீங்களும் பொறுப்பாளராக இருக்கின்றீர்கள். எனவே, நீங்கள் கொலையில் ஈடுபட்டவரின் பெயரைக் கூறி விட்டால் உங்களை விட்டு விட்டு அவரை பிடித்துக் கொள்வோம் என்று கூறினர். ஒரு தாளில் அவரிடம் கையெழுத்து வாங்க முயற்சி செய்து வந்தனர். இந்த பொறுப்பாளர்களில் வேறு சிலரின் பெயரையும் அவர்கள் கூறினர். ஆனால் மாஸ்டர் சாஹிப் அந்த தாளில் கையெழுத்துப் போடவில்லை. காவல்துறையினர் அவரை பலவந்தமாக அடித்துக் கொடுமைப்படுத்தும் போது முதன்முறையாக ஜமாஅத்தின் பொறுப்பாளர் ஒருவர் எங்கள் கைகளில் வந்துள்ளார். இதற்து முன் இவர்கள் நழுவிச் சென்று

கொண்டிருந்தனர் என்று கூறினர். பிறகு இவ்வாறு அவர் மீது கொடுமை இழைத்தவாறு இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் கலீஃபாக்களின் பெயரைக் கூறி ஜமாஅத்திற்கு எதிராக மிகத் தீய சொற்களைக் கூறி வந்தனர். பலவந்தமாக கொடூரமாக நடந்து கொண்டதன் விளைவாக மாஸ்டர் அப்துல் குத்தூஸ் சாஹிபின் நிலைமை மிகவும் மோசமாகி விட்டது.

நான் ஏற்கனவே கூறியது போன்று அவர் இரத்த வாந்தி எடுத்தார். பிறகு காவல்துறையினர் அவர் மீது கொடுமைகள் இழைப்பதை நிறுத்திக் கொண்டது. அவருக்கு கொஞ்சம் மருந்து கொடுத்தனர். பிறகு இவரது நிலை கொஞ்சம் சரியானதும் போலீஸ் இவரை காவல் நிலையத்திற்கு திரும்ப அழைத்து வந்தது. பிறகு அவர்களை அவரது நண்பரிடம் ஒப்படைத்தது. மாஸ்டர் அப்துல் குத்தூஸ் சாஹிப் அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் ஐ.சி.யு.-வில் வைக்கப்பட்டிருந்தார். தொடர்ந்து அவருக்கு இரத்தம் வந்து கொண்டிருந்தது. அவர் ஷஹீதாவதற்கு ஒருநாள் முன்னதாக மார்ச் 29ம் தேதி மீண்டும் அவருக்கு இரத்த வாந்தி வந்தது. மீண்டும் அவரது நிலைமை மிகவும் மோசமானது. நுரையீரலும் மோசமாகி விட்டது. இதன் காரணமாக கடந்த மார்ச் 30ம் தேதி ஜுமுஆ நாளன்று உணர்வற்ற நிலை ஏற்பட்டது. அந்த நிலையிலேயே அவர் வஃபாத் ஆகிவிட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

வஃபாத்திற்கு முன்னதாக Tahir Heart Institute -ற்கு இவரைக் கொண்டு செல்ல ஏற்பட்டிருந்தது. டயாலிஸிஸ் செய்வதாக இருந்தது. அதற்கான தயாரிப்பு நடந்து கொண்டிருந்தது. ஆனால் காவல்துறையினர் கொடூரமான செயல்களால் அவருக்கு ஏற்பட்ட உள் காயங்களினால் இவர் உயிர் தப்ப முடியாமல் போய் விட்டது. ஷஹாதத்தின் உயர் தகுதி அவருக்கு கிடைத்தது. இவரது மனைவியின் சகோதரர் மேலும் பல விபரங்களை எழுதியுள்ளார்கள். மருத்துவமனையில் இருந்த சமயத்தில் இவர்களிடம் இந்த விபரங்களை அப்துல் குத்தூஸ் சாஹிப் அவர்கள் கூறியுள்ளார்கள்.

அவர் கூறுகின்றார்: மார்ச் 17ம் தேதி ரப்வாவிற்கு அருகிலுள்ள சினியோட்டைக் கடந்து செல்லும் வழியிலுள்ள ஜங்கல் கொலோத்ரான் என்ற இடத்திற்கு இவர்கள் அவரை கொண்டு சென்றனர். மிகவும் கொடூரமான முறையில் அவர் மீது கொடுமைகள் இழைக்கப்பட்டன. மாஸ்டர் அப்துல் குத்தூஸ் சாஹிப் அவர்கள் இவரிடம் கூறியதாக அவர்கள் எழுதுகின்றார்கள்:

நான் இந்த எல்லா விஷயங்களையும் மிகவும் தைரியத்துடன் கூறுகின்றேன். இவற்றை அவரே என்னிடம் கூறினார். அம்ஜத் பாஜ்வா சாஹிபுடன் நடந்து வந்து இவர் காவல் நிலையத்திற்கு வெளியே வந்ததும் வழியில் சென்றோம். வழியில் அவர்கள் என் மீது கடுமையாக கொடுமைகள் இழைக்கப்பட்டன என்று கூறினார்கள். எந்த அளவு கொடுமையிழைத்துள்ளனர் என்றால் அது மிகவும் பயங்கரமானதாக இருந்தது. காவல் நிலையத்தில் இருந்த இன்சார்ஜ் மற்றும் விசாரணைக்காக நியமிக்கப்பட்டிருந்த அதிகாரி ஆகியோரும் இந்த கொடூரமான செயலில் பங்கு பெற்றனர். சினியோட்டிலிருந்து பிண்டி பட்டியான் ரோட்டில் அவர்களைக் கொண்டு சென்றார்கள். பிறகு ஒரு நதியின் பக்கம் கொண்டு சென்றனர். நதிக்குள் ஒரு வழி இருந்தது. அதன் வழியாக ஜங்கல் கொத்ரோரான் என்ற இடத்திற்கு கொண்டு சென்றார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அங்குள்ள ஒரு அறையில் அவர்கள் என்னை அடைத்து வைத்தார்கள். கொஞ்ச நேரம் கழிந்த பிறகு அங்கிருந்து என்னை வெளியே கொண்டு வந்த சமயத்தில் நாற்காலிகளில் ரப்வா காவல் நிலைய பொறுப்பாளர், விசாரணை அதிகாரி உள்ளூர காவல்துறை அதிகாரி, டி.எஸ்.பி. ஆகியோர் வட்டமாக அமர்ந்திருந்தார்கள். அவர்களது கைகளில் ஒரு காகிதம் இருந்தது. இது உனது வாக்குமூலமாகும். இதில் கையெழுத்துப் போட வேண்டும் என்று அவர்கள் என்னிடம் கூறினார்கள். அந்த காகிதத்தில் ரப்வாவின் தலைமையக அஞ்சுமன் மற்றும் சதர் உமூமி ஆகியோருக்கு எதிராக அந்த வாக்குமூலம் எழுதப்பட்டிருந்தது. அப்போது நான் இது தவறான வாக்குமூலமாகும். நான் இதில் ஏன் கையெழுத்திட வேண்டும்? என்று கேட்டேன். அந்த வாக்குமூலத்தில் யார் கொலை செய்யப்பட்டாரோ அந்த கொலையில் இந்த இந்த நபருக்கு தொடர்பு இருக்கின்றது. அவர்கள் அந்த கொலையில் ஈடுபட்டனர் என்று எழுதியிருந்தார்கள். நீ இதில் கையெழுத்துப் போட்டு விட்டால் நாங்கள் உங்களை விட்டு விடுவோம் என்று அவர்கள் கூறினார்கள்.

கூறுகின்றார்கள்: நான் கையெழுத்துப் போட மறுத்து விட்டேன். இது எனது வாக்குமூலம் அல்ல. இவ்வாறு சம்பவம் நடக்கவில்லை. பிறகு நான் எப்படி கையெழுத்துப் போட முடியும்? என்று கேட்டேன். பிறகு அவர்கள் என்னை மிரட்டினார்கள். நீயாகவே இதில் கையெழுத்துப் போட்டு விட்டால் நீ தப்பி விடுவாய் அல்லது நாங்களே உன்னை கையெழுத்துப் போட வைப்போம் என்று கூறினர்.

நான் இரண்டு முறை இதற்கு மறுப்பு தெரிவித்ததும் எனக்கு அருகில் நின்று கொண்டிருந்த இருவர் என்னை கீழே தள்ளி விட்டனர். பிறகு என்னை அடிக்க ஆரம்பித்தனர். இதற்குப் பிறகு தொடர்ச்சியாக என் மீது கொடுமைகளை இழைத்தனர். தங்களது கோரிக்கையை மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டிருந்தனர். பல்வேறு வழிகளில் கொடூரமாக அவரை சித்திரவதைக்கு ஆளாக்கினர். மரத்தாலான அதிக எடையுள்ள ஒரு ரோலரை இவரது உடலில் வைத்து இங்குமங்கும் உருட்டினர். பிறகு அவர்களை கயிறுகளால் கட்டி தரையில் இழுத்துக் கொண்டு வந்தனர். இதைத் தவிர தொடர்ந்து அவர்களை விழித்திருக்கும்படி செய்தனர். எனது கண்கள் தூங்க ஆரம்பித்ததால் என்னை சிறையிலிருந்து வெளியே கொண்டு வந்து அடிப்பார்கள். அந்த இடத்தில் மிக தீயவனாக ஒரு புகழ்பெற்ற திருடன், கொள்ளைக்காரன் இருந்தான். அவனும் இவர்களுடன் இருந்தான். காவல்துறையினர் தோலாலான செருப்பால் அவனை 5 முறை அடித்தால் அதே செருப்பால் என்னை 25 முறை அடித்தனர் என்று மாஸ்டர் அப்துல் குத்தூஸ் சாஹிப் கூறினார்கள்.

ஒருமுறை எனது உடல்நிலை மிகவும் மோசமானதும் ஹஸ்ரா லேபஹ் என்ற அருகிலுள்ள கிராமத்திற்கு என்னை அழைத்துச் சென்றனர். அங்கு எனக்கு ஊசி போட்டனர். கொஞ்சம் மருந்தும் தந்தனர். எனது உடல்நிலை சற்று தேறியதும் மீண்டும் என் மீது கொடுமையிழைக்க ஆரம்பித்தனர். இதில் காவல்துறை அதிகாரிகள் பலரும் பங்கு பெற்றனர். இவர்கள் ஏசிப்பேசி வந்தனர். உங்களது பெரியவரை இலண்டனில் இருந்து அழைத்து வாருங்கள். அவர் உங்களை விடுவிக்கட்டும் என்று கூறினர். பிறகு சான்றோர்களை தரக்குறைவான சொற்களைக் கூறி ஏசினர். பிறகு இந்த அளவு கொடுகைளைச் சகித்துக் கொள்வதற்கான தைரியம் எனக்கு இருக்கவில்லை. அல்லாஹ் இந்தக் கொடுகைளைச் சகித்துக் கொள்வதற்கான தைரியத்தை எனக்கு வழங்குமாறு நான் அல்லாஹ்விடம் துஆ செய்தேன். பிறகு அல்லாஹ் தனரு அருளால் அவருக்கு இவற்றை சகித்துக் கொள்வதற்கான தைரியத்தை வழங்கினான்.

**சதர் உமூமி சாஹிப் அவர்கள் எனக்கு இவ்வாறு எழுதியுள்ளார்கள்:**

நான் அப்துல் குத்தூஸ் சாஹிபிடம் இந்த அளவுக்கு உங்களிடம் அவர்கள் விசாரனை செய்திருக்கும்போது ஏதாவது அவர்கள் உங்களிடமிருந்து எழுதி வாங்கி இருப்பார்கள் என்று கூறினேன். அப்போது அவர்கள் மிகவும் உணர்வு பொங்க அவர்களால் என்னை ஒரு புள்ளியைக் கூட, போட வைக்க முடியவில்லை என்று கூறினார்கள்.

இதுதான் தங்களது ஈமானைப் பாதுகாத்தவாறு உண்மையில் நிலைத்திருப்பவர்களின் வரலாறாகும். உறுதியான எண்ணம், தைரியம் ஆகியவற்றின் வடிவமாகத் திகழ்ந்த இவர் தனது உயிரை அர்ப்பணித்து விட்டார். ஆனால், அவர் பொய் சாட்சி கூறவில்லை.

அல்லாஹ் பொய் கூறுவதை இணைவைத்தலுக்கு சமமாகக் கூறுகின்றான். இந்த மகத்தான ஷஹீது நமக்கு பல பாடங்களைக் கற்றுத் தந்துள்ளார். அவர் நமக்கு தந்துள்ள ஒரு படிப்பினையில்தான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அடிப்படை உள்ளது. அது என்னவென்றால், ஏகத்துவத்தை நிலைபெறச் செய்வதற்காக உங்களது உயிரைப் பற்றி கூட சிறிதும் பொருட்படுத்தக் கூடாது. ஏனென்றால், பொய் இணை வைத்தலுக்கு சமமான ஒன்றாகும். அதனால் நம்மிடமிருந்து இணை வைக்கின்ற செயல் நடைபெற முடியாது. ஷஹீது மர்ஹூம் தனது பைஅத் உடன்படிக்கையையும் நிறைவேற்றியுள்ளார். சிறப்பாக நிறைவேற்றியுள்ளார்.

ஷஹீது மர்ஹூம் தனக்கு இழைக்கப்படும் கொடுமைகளின் காரணமாக காவல்துறையினரின் உள்ளம் விரும்புகின்ற வாக்குமூலத்தை தந்திருந்தால் அதன் விளைவுகள் ஒட்டுமொத்தமாக ஜமாஅத்திற்கு மிகவும் அபாயகரமானதாக ஆகி இருக்கும்.

இவ்வாறு மிர்ஸா குலாம் காதிர் ஷஹீது அவர்களை இதற்கான கருவியாகப் பயன்படுத்த இவர்கள் விரும்பினார்கள். ஒரு பெயர்தாங்கி தீவிர அமைப்பே இவ்வாறு விரும்பியது. ஆனால் இங்கோ போலீஸ் இப்படி விரும்பினார்கள். மாவட்டத்திலுள்ள பெரிய காவல்துறை அதிகாரிகள் இந்த கொடுமையான செயலில் தங்களுக்கு பங்கில்லை என்று கூறி மறுத்து வருகின்றனர். அவர்கள் குற்றமற்றவர்கள் என்று கூறி வருகின்றனர். இவர்களை Bypass செய்தவாறு சிறிய நிலையிலுள்ள அதிகாரிகள் மூலமாக அரசு தரப்பிலிருந்து ஏதாவது கட்டளைகள் கூறப்பட்டிருக்கலாம். அதுவும் தூரமான ஒன்றல்ல. உயர்நிலையிலுள்ள அதிகாரிகள் சில நேரங்களில் இவ்வாறு வழிகாட்டல்களை வழங்கி வருகின்றனர். ஜெனரல் ஸியாவுல் ஹக்கின் காலத்தில் ஜியா சாஹிப் தாமாகவே காவல்துறை பொறுப்பாளருக்கு போன் செய்ய முடிந்தது. அப்படியென்றால் இப்போதும் அவ்வாறே ஏன் நடக்க முடியாது? இங்கு மாநிலத்திலுள்ள அரசாங்கமும் நமக்கு எதிராகவே இருக்கின்றது.

இப்போது இந்த காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக முறையீடு செய்வதற்கான முயற்சிகள் நடக்கும் போது உயர் மட்டத்திலுள்ள ஆட்சியாளர்கள் தரப்பிலிருந்தும் இவர்களுடன் சமாதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்று இவர்கள் வற்புறுத்துகின்றனர். நீங்கள் சமாதானம் செய்து கொள்ளுங்கள் என்று கூறப்படுகிறது. பாகிஸ்தானில் குற்றவாளிதான் அதிகாரம் படைத்தவராக இருக்கின்றார். எனவே, வெளிப்படையாக பார்க்கும் போது நீதியை நாம் இவர்களிடம் எதிர்பார்க்க முடியாது.

ஆனால் சட்டத்தின் எல்லைக்குள் இருந்தவாறு ஜமாஅத் எல்லா வழிமுறைகளையும் பயன்படுத்துகின்றது. இன்ஷா அல்லாஹ் பயன்படுத்தும்.

எவ்வாறிருப்பினும், போலீஸ் விரும்புகின்ற எந்த வகையான வாக்குமூலத்தில் இவர்கள் கையெழுத்துப் போட்டிருந்தாலும் அது மிகவும் அபாயகரமானதாக ஆகியிருக்கும்.

கொலை முயற்சி என்ற பெயரில் பொய்யான வழக்குகளை தொடுப்பதன் மூலமாக தலைமையக பொறுப்பாளர்களை இவர்கள் கைது செய்திருக்கலாம். தலைமையக அலுவலகங்கள் மீது கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கும். ஜமாஅத்தின் போதனைகள், முயற்சிகள், அமைதியை விரும்புகின்ற ஜமாஅத் ஆக நாம் இருக்கின்றோம் என்ற நிலையை அகற்றி நமக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் நடந்திருக்கலாம். ஜமாஅத்திற்கு இழப்பை ஏற்படுத்தும் வகையிலுள்ள இன்னும் பல விஷயங்கள் நிகழ்ந்திருக்கலாம்.

தேசிய அளவில் மட்டுமின்றி சர்வதேச அளவில் நமக்கு இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம். எவ்வாறிருப்பனும், இவர்கள் ஒரு சூழ்ச்சியை நிறைவேற்ற முயற்சி செய்தனர். ஆனால் அல்லாஹ் தனது பொது வாழ்க்கையில் மிகவும் மென்மையான உள்ளம் கொண்ட கொடுமைகளை கற்பனை செய்தும் பார்த்திராத ஒரு தூய இயல்பு கொண்ட மனிதர் மூலமாக இவர்களது இந்த சூழ்ச்சியை முறியடித்து விட்டான். அவரோ இவர்களது பொய் மற்றும் சூழ்ச்சிகளுக்கு எதிரில் ஒரு உறுதியான பாறாங்கல் போன்று நின்று விட்டார். ஜமாஅத்திற்கு சிறிய இழப்பு கூட வராமல் பார்த்துக் கொண்டார்.

குத்தூஸே! நாங்கள் உம் மீது சாந்தி நிலவட்டும் என்று கூறுகின்றோம். நீர் உம் மீது அளவு கடந்த நிலையிலுள்ள கொடுமைகள் இழைக்கப்பட்டிருந்தும் அவற்றை சகித்துக் கொண்டீர்கள். ஆனால் ஜமாஅத்தின் கண்ணியத்தின் மீது எவ்வித இழுக்கும் வராமல் பார்த்து கொண்டீர்கள். நீங்கள் உங்களது உயிரை அர்ப்பணித்து ஜமாஅத்தை ஒரு மிகப்பெரும் குழப்பத்திலிருந்தும் காப்பாற்றி விட்டீர்கள்.

எனவே, மாஸ்டர் அப்துல் குத்தூஸ் ஒரு சாதாரண ஷஹீது அல்ல. மாறாக, ஷஹீது ஆனவர்களில் இவருக்கு மிக உயர்வான தகுதி இருக்கின்றது.

இந்த தற்காலிக உலகத்திலிருந்து ஒருநாள் எல்லாருமே பிரிந்து செல்ல வேண்டியது வரும். ஆனால் மாஸ்டர் அப்துல் குத்தூஸ் சாஹிப் நற்பாக்கியம் பெற்றவராவார். இவரை இறைவன் உயிருள்ளவர் என்று கூறுகின்றான். உலக ரிஸ்குகளை விட மிக உயர்வான ரிஸ்கை பெறக்கூடியவராக அவர் ஆகி விட்டார். எந்த ஜமாஅத்திற்காகவும் எந்த நோக்கத்திற்காகவும் அவர் தியாகம் செய்துள்ளாரோ அது தொடர்பான

உண்மையான நற்செய்தி அந்த உலகத்தில் தான் நமக்கு தெரிய வரும். ஷஹீது மர்ஹூம் எந்தப் பாடத்தை நமக்கு தந்துள்ளார்களோ அதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அது ஹஸ்புனல்லாஹு வநிஃமல் வகீல் அதாவது நமக்கு அல்லாஹ் போதுமானவனாக இருக்கின்றான். அவனே எவ்வளவு சிறந்த பாதுகாவலனாக இருக்கின்றான் என்பதாகும்.

எப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டாலும் அல்லாஹ்வுடன் உள்ள தொடர்பை விட்டுவிடக் கூடாது. இந்த பாடத்தைத்தான் அவர்கள் நமக்கு தந்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்தக் கருத்தை இவ்வாறு கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வுடன் உங்களுக்கு வலுவான தொடர்பு இருந்தால் உலகவாதிகள் உங்களுக்கு எவ்வித சீர்குலைவையும் ஏற்படுத்த முடியாது. இந்த மக்கள் தங்களது எண்ணத்தில் அஹ்மதிகளை ஏசிப்பேசி, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி தரக்குறைவான சொற்களைக் கூறி நமது உள்ளங்களை காயப்படுத்துகின்றனர். கொடுமைகள் இழைத்து அதில் மகிழ்ச்சி அடைகின்றனர். ஒருநாள் இன்ஷா அல்லாஹ் வரப்போகிறது. அப்போது இறைவன் இவர்களில் ஒவ்வொருவரிடத்திலும் கணக்கெடுப்பான்.

பாகிஸ்தானில் வசிக்கின்ற அஹ்மதிகளுக்கு பொதுவாகவும் ரப்வாவில் வசிப்பவர்களுக்கு குறிப்பாகவும் ஷஹீது மர்ஹூம் ஒரு தூதுச் செய்தியை தந்து விட்டுச் சென்றுள்ளார்கள்.

சட்டத்திற்கு கண்ணியமளிப்பதும், அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு கண்ணியமளிப்பதும் ஓர் அஹ்மதியின் கடமையாக இருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் எந்த ஒரு மனிதனிடத்திலும் அவர் எப்படிப்பட்ட உயர்நிலையிலுள்ள போலீஸ் அதிகாரியாக இருந்தாலும் சரி அல்லது உயர் அதிகாரியாக இருந்தாலும் சரி எவ்வகையிலும் அவர்களைப் பார்த்து அஞ்சப்பட வேண்டிய தேவை நமக்கு இல்லை. அவர்கள் எப்படிப்பட்ட கொடுமைகளை நம்மீது இழைத்தாலும் அஹ்மதிகள் அல்லாஹ் ஒருவனுக்குத்தான் அஞ்ச வேண்டும். அந்த இறைவனுக்கு தான் நாம் அஞ்ச வேண்டும்.

காவல்துறையைச் சார்ந்தவர்களின் அதிகாரம் சட்டத்திற்கு கண்ணியம் அளிப்பவர்கள் மீது மட்டும்தான் செல்லுபடியாகும். தீவிரவாதிகளுக்கு முன்னால், முல்லாக்களின் முன்னால், யார் உடைத்தல், நொறுக்குதல், தீவிரவாதம் ஆகிய செயல்களில் ஈடுபடுகின்றார்களோ யார் இவர்களை எதிர்த்து நிற்கின்றார்களே, யார் இவர்களை வெடி குண்டுகள் மூலம் தகர்க்கின்றார்களோ அவர்களுக்கு முன்னால் இவர்கள் எப்படி பெட்டிப்பாம்புகளாக ஆகி விடுகின்றனர்.

கடந்த சில நாட்களுக்கு முன் பல்வேறு துறைகளுடன் தொடர்புள்ள ஜமாஅத்தைச் சாராத சகோதரர்களுடன் ஒரு அமர்வு நடந்தது. அப்போது ஒருவர், ஒவ்வொருவரும் பைஅத் உடன்படிக்கை செய்திருப்பது உங்கள் ஜமாஅத்தின் சிறப்பம்சமாகும். நீங்கள் எதை கூறினாலும் அவர்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள். அதை ஏற்றுக்கொள்ளத் தயாராகி விடுகின்றார்கள். அவ்வாறிருக்க பாகிஸ்தானிலுள்ள நிலைமையை மாற்றுவதற்கு செயலளவில் எவ்வித நடவடிக்கையும் ஏன் நீங்கள் எடுக்கவில்லை? என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் அவரிடம் நாங்கள் அரசியல் அமைப்பின் ஒரு அங்கமாக எங்களால் ஆக முடியாது. ஏனென்றால் ஓர் அஹ்மதி அரசியலுக்கு வரவேண்டும் என்றால் அங்குள்ள சட்டம் என்ன கூறுகின்றதென்றால் அஹ்மதிகள் தங்களை முதலில் முஸ்லிம் அல்லாதவர் என்று கூற வேண்டும். பிறகு தான் அவர்கள் ஜனநாயக அமைப்பின் ஓர் அங்கமாக ஆக முடியும். அதில்தான் ஓட்டுப் போடுவதற்கான உரிமை தரப்படுகிறது. இதை நாங்கள் ஒருபோதும் செய்யமாட்டோம். எங்களால் இதை செய்ய முடியாது.

இரண்டாவதாக, வீதிகளில் இறங்கி தங்களது ஆற்றலை வெளிப்படுத்துவது இருக்கின்றது அல்லது கடுமை காட்டுதலை விரும்புவது இருக்கிறது அல்லது தீவிரவாதம் இருக்கின்றது. நாங்கள் இவற்றையும் செய்யமாட்டோம். ஏனென்றால், நாங்கள் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும் மக்களாக இருக்கின்றோம். இந்தக் காலத்தில் தோன்றிய நேர்வழியைக் காட்டுபவரிடமிருந்து இதையே நாங்கள் கற்றுள்ளோம். இதுவே சரியான இஸ்லாமிய போதனையாகும். இதிலிருந்தும் விலகித் தொலைவில் செல்லவும் எங்களால் முடியாது.

அரசாங்கத் துறைகள் கடுமை காட்டுதலை விரும்புபவர்களுக்கு துணையான நிற்கின்றன அல்லது கடுமையைக் காட்டுபவர்களுக்கே அது அஞ்சுகின்றது. எவர்கள் வீதிக்கு வந்து தங்களது ஆற்றல்களை காட்டுகின்றார்களே அவர்களுக்கு அவை துணை நிற்கின்றன. இவ்வாறு அரசியல்வாதிகளும் அவர்கள் கூறுவதைத்தான் கேட்கின்றார்கள்.

அதனால்தான் அஹ்மதிகளை அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஆகுமான உரிமைகளிலிருந்தும் கூட இவர்கள் விலக்கி வைக்கின்றார்கள். நான் அவர்களிடம் கூறினேன்.

பைஅத் செய்வதன் காரணமாக அஹ்மதிகள் அமைதியாக தங்களது உயிர்களையும், பொருள்களையும் தியாகம் செய்து கொண்டே செல்கின்றனர். எந்த சட்டத்தையும் அவர்கள் தமது கைகளில் எடுப்பதில்லை.

எவ்வாறிருப்பினும், இன்ஷா அல்லாஹ் ஒரு நேரம் வரும். அப்போது இந்த மக்களே அஹ்மதிகளுக்கு மதிப்பையும் மரியாதையையும் வழங்கும் கட்டாயத்திற்கு ஆளாவார்கள். இன்று நாங்கள் கொடுமைகளுக்கு இலக்காக்குகின்றார்கள். இறைவனின் திட்டங்களில் தாமதம் இருக்கலாம். ஆனால் அவனிடத்தில் அநீதியில்லை.

எனவே, இறைவனுக்கு முன்னால் மட்டும் குனியுங்கள். அவனிடம் உதவி கேளுங்கள. அல்லாஹ்வின் மிகைத்து நிற்கக்கூடிய வெற்றியின் விதிக்காக காத்திருங்கள்.

அன்பிற்குரிய குத்தூஸ் அவர்களின் ஷஹீது தொடர்பான சில போலீஸ் அதிகாரிகள் இதற்கு பொறுப்பாளிகளாக இருப்பவர்களுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றே கூறியுள்ளார்கள். ஆனால் மறுபக்கம் நம்மை வற்புறுத்துவதும் இருந்து வருகிறது. இவர்களது நீதியின் கண்கள் பிரகாசமாக இருக்கும்படி அல்லாஹ் செய்வானாக! அவ்வாறு இல்லையென்றால் இந்த கொடுஞ்செயலும் காட்டுமிராண்டித்தனமும் அரசாங்க பொறுப்பில் உள்ளவர்கள் மூலம் நடந்தாலும் இது அவர்களது எல்லைக்குட்பட்ட செயல்களாக இருக்கின்றது. அரசாங்கத்திற்கோ அல்லது உயர் அதிகாரிகளுக்கோ இதில் எவ்வித பங்கும் இல்லை என்று இன்று இவர்கள் கூறுகின்றார்கள். பெரும் கூச்சல் ஏற்பட்டு விட்டதால் இவ்வாறு இவர்கள் கூற ஆரம்பித்துள்ளார்கள். ஆனால் இவர்கள் நீதியை நிலைநாட்டவில்லை என்றால் முழு அரசு இயந்திரமும் இந்த தீவிரவாதத்தில் பங்கு பெற்றுள்ளனர் என்றே அதற்குப் பொருள் ஆகும்.

பிறகு நான் கூறியது போன்றே இறைவனிடத்தில் சில விஷயங்கள் காலதாமதமாக நடக்கலாம். ஆனால் எவ்வித இருளும் அவனிடத்தில் இல்லை. மேலும் நிச்சயமாக இந்த மக்கள் தங்களது படிப்பினை பெறத்தக்க முடிவினை அடைவார்கள்.

ஜமாஅத்திற்கு இழப்பை ஏற்படுத்துவதற்காக இவர்களிடம் காணப்படும் விருப்பம், ஆசை ஆகியவற்றில் ஒருபோதும் இவர்களுக்கு வெற்றி கிடைக்காது.

ஜமாஅத் முன்னேறிக் கொண்டே செல்லும் இன்ஷா அல்லாஹ். அஹ்மதிய்யத் 200 நாடுகளில் பரவி இருப்பது இவ்வாறான உயிர்தியாகம் செய்தவர்களின் தியாகங்களின் விளைவேயாகும்.

எனவே அஹ்மதிகள் அவர்கள் செய்கின்ற ஒவ்வொரு தியாகத்தின் விளைவாகவும் இது நமது முன்னேற்றத்தின் நாட்களை அருகில் கொண்டு வருகிறது என்ற விஷயத்தில் அவர்கள் மேலும் வலுவடைந்தவர்களாக ஆக வேண்டும். எந்த அளவு பெரிய தியாகம் செய்யப்படுகிறதோ அந்த அளவு விரைவாக இறைவனது அருள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு நமக்கு இருக்கின்றது.

அல்லாஹ்வின் இந்த வாக்குறுதியை நினைவில் கொள்ளுங்கள்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் பலவீனத்தைக் காட்டாதீர்கள். மேலும் நீங்கள் துயரப்படவும் வேண்டாம். நீங்கள் மூஃமின்களாக இருந்தால் நீங்கள் தான் மிகைத்து நிற்பீர்கள்.

நமது ஈமானை பாதுகாப்பது நமது கடமையாகும்.

ஒவ்வொரு ஷஹாதத்தும், ஒவ்வொரு தியாகமும் நமது ஈமானில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு காரணமாக ஆகிவிட வேண்டும். பிறகு அல்லாஹ்வின் அருள் எப்படி இறங்குகிறது என்பதைப் பாருங்கள். இன்ஷா அல்லாஹ்.

பொறுமை, தைரியம் மற்றும் துஆ ஆகியவற்றை கடைபிடித்து செயல்படுங்கள். சிலர் பொறுமை, துஆ ஆகியவற்றை தவிர வேறு ஏதாவது ஒன்றையும் செய்ய வேண்டும் என்று எனக்கு எழுதுகின்றனர். நான் இதற்கு முன்னரும் கூறியுள்ளேன். அதை தான் தொடர்ந்து கூறியும் வருகிறேன். எப்போதும் இதைத் தான் கூறிக் கொண்டிருக்கின்றேன். அதாவது பொறுமையும் துஆவும்தான் நமது ஆயுதமாகும். இதை ஒவ்வொரு அஹ்மதியும் சரியாகப் பயன்படுத்திய பிறகு அல்லாஹ்வின் அருள் எவ்வளவு விரைவாக இறங்குகிறது என்பதை அவர்கள் பார்க்கட்டும். இப்போதும் கூட நமது முயற்சிகள், நமது துஆக்கள் ஆகியவற்றை விட பல மடங்கு அதிகமாக கனிகளை அவன் நமக்கு வழங்கி வருகின்றான். எனவே நாம் துயரப்படுவதற்கான எந்த காரணமும் நமக்கு இல்லை. அல்லது உள்ளம் உடைந்து விடும் நிலையிலுள்ள எந்தக் காரணமும் நமக்கு இல்லை.

வெளிப்படையாக பார்க்கும் போது எதிரிகளும் அபாயகரமான திட்டங்களை தீட்டுகின்றனர். ஆனால் அல்லாஹ் கூறுகின்றான்:

நீங்கள் துக்கப்பட வேண்டாம். இன்ஷா அல்லாஹ் எதிரிகளின் திட்டங்கள் ஒன்றுமற்றவையாக ஆகி விடும். ஜமாஅத்தை அழித்துவிட வேண்டும் என்ற எதிரிகளின் தவிப்பு ஒருபோதும் நிறைவேறாது. ஆனால், இந்த மக்களின் பூமி மெதுமெதுவாக சுருங்கி விடும். அவ்வாறு சுருங்கிக் கொண்டிருக்கிறது. இவர்களிலிருந்து நல்லியல்பு கொண்டவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து கொண்டே இருப்பார்கள்.

அல்லாஹ் நமது சிறுபான்மையை பெரும்பான்மையாக மாற்றுவதற்காக நம்மை மேலும் ஒரு படி முன்னே குதிக்க வைத்துள்ளான் என்பதை நமது ஒவ்வொரு தியாகமும் நமக்கு கவனமூட்டுகின்றது. அவ்வாறு கவனமூட்டவும் வேண்டும்.

குத்தூஸ் ஷஹீது செய்தது போன்றே தியாகங்கள் நம்மை நூற்றுக்கணக்கில் குதிக்க வைத்து நாம் முன்னேறிச் செல்வதற்கு காரணமாக இருக்கின்றது. இன்ஷா அல்லாஹ் அவ்வாறே நடக்கும். நமது எதிர்நடவடிக்கை அவநம்பிக்கையாக இருக்கக் கூடாது. கடுமையை விரும்புவதாகவும் இருக்கக் கூடாது. நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அல்லாஹ் செய்துள்ள வாக்குறுதிகள் மீது முழுமையான நம்பிக்கை இருக்கின்றது. அவை முழுமையாக நிறைவேறுவதையும் நாம் பார்க்கின்றோம். அவர்களிடமும் அவர்களது ஜமாஅத்திடமும் அல்லாஹ் பொறுமை மற்றும் துஆ மூலம் தங்களது பணிகளைச் செய்து கொண்டே செல்லும்படி கூறியுள்ளான். பிறகு வெற்றி நமக்கு விதிக்கப்பட்டுள்ளது என அவன் நமக்கு வாக்குறுதி வழங்கியுள்ளான்.

எனவே நம்மிடமிருந்து நமக்கு விதிக்கப்பட்டதை யார் தடுத்து நிறுத்த முடியும்? இதை இறைவன் தீர்மானித்து விட்டான். நமது பொறுமையின்மை, நமது ஈமானிலுள்ள பலவீனம் நமக்கு விதிக்கப்பட்ட அந்த வெற்றிகளை நம்மிடமிருந்து தொலைவில் கொண்டு சென்று விடக்கூடாது என்பதற்காக நாம் துஆ செய்ய வேண்டும்.

நினைவில் கொள்ளுங்கள். அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த நாட்டை உருவாக்குவதிலும் தமது பங்கை செலுத்தயிருக்கின்றது. அதை நிறுவுவதிலும் அதை வளர்ச்சியடையச் செய்வதிலும் அதற்கு பங்கு இருக்கின்றது. அதற்காக பல தியாகங்களைச் செய்துள்ளது. இன்றும் கூட இந்த நாட்டை அஹ்மதிகளின் துஆக்கள் தான் பாதுகாக்கின்றது. அஹ்மதிகளின் துஆக்கள்தான் அதை பாதுகாக்க முடியும். இந்த நாட்டிற்காக நமது பெரியோர்கள் செய்த தியாகங்களை இந்த துஆக்கள், துயரங்கள் ஷஹாதத்துகள் ஆகியவற்றின் காரணமாக வீணாக்க மாட்டோம். இன்ஷா அல்லாஹ்.

எனவே இந்த கொடுகைளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஒரேயொரு சிகிச்சை தான் இருக்கின்றது. இந்த நாட்டை காப்பாற்றுவதற்காக ஒரேயொரு விதிமுறைதான் இருக்கின்றது. அது முன்பை விட அதிகமாக இறைவன் முன்னால் குனிந்தவாறு அவனது அருளைக் கேட்க வேண்டும். நாம் அநீதியிழைக்கப்பட்டவர்களாக ஆகியதுடன் தக்வா, பொறுமை, இறைவன் மீதுள்ள நம்பிக்கை உறுதியான பாதங்களுடன் நிலைநிற்பது, துஆ இஸ்திக்ஃபார் ஆகியவற்றின் மூலம் முன்பை விட அதிகமாக பலன் பெற்றால்தான் இன்ஷா அல்லாஹ் வெற்றியின் காட்சிகளை நாம் மிக விரைவில் பார்ப்போம். அல்லாஹ் அவ்வாறே செய்வானாக! நாம் பாகிஸ்தானிலும் மற்ற இஸ்லாமிய நாடுகளிலும் மார்க்கத்தின் பெயரால் இழைக்கப்படுகின்ற கொடுமைகளையும் மிக விரைவாக அவை இல்லாமல் அழிந்து போவதைப் பார்க்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனால் நியமிக்கப்பட்டவர்கள் மீதும் அவர்களது ஜமாஅத்தின் மீதும் பூகம்பங்கள் வருகின்றன. அழிவு பற்றிய அச்சம் ஏற்படுகின்றது. பல்வேறு விதமான அபாயங்கள் வருகின்றன.

இரண்டாவதாக, இப்படிப்பட்ட சம்பவங்கள் மூலம் கிடைக்கக்கூடிய இன்னொரு பலன் காய்களாக இருப்பவர்கள், பழங்களாக இருப்பவர்கள் ஆகியோரது பரீட்சை இதன் மூலம் நடக்கின்றது.

எவர்கள் காய்களாக இருக்கின்றார்களோ அவர்களது பாதங்கள் செழிப்பான நிலை நீடிக்கும் வரைதான் இருக்கும். துன்பங்கள் வரும் போது அவர்கள் பிரிந்து தனியாக சென்று விடுகின்றார்கள். எதுவரை சோதனை வருவதில்லையோ அதுவரை எந்த அடையாளமும் வெளிப்படாது என்பதுதான் என்னுடன் இருந்து வருகின்ற இறைவனின் நடைமுறையாகும். இறைவனுக்கு தனது அடியார்களுடன் இருக்கின்ற மிகப்பெரும் நேசம் அவர்களை சோதனையில் ஆழ்த்துவதேயாகும். இது தொடர்பாக அவன் கூறுகின்றான்:

அதாவது ஒவ்வொரு வகையிலான துன்ப வேளையிலும் துக்கத்தின் தருணத்திலும் அவர்களது திரும்புதல் அல்லாஹ்வின் பக்கம்தான் இருக்கும்.

எவர்கள் தமது கொள்கையில் உறுதியாக நிலைத்து நிற்கின்றார்களோ அப்படிப்பட்டவர்களுக்கே அல்லாஹ்வின் அருட்கொடைகள் கிடைக்கின்றன. மகிழ்ச்சியின் நாட்கள் பார்ப்பதற்க இன்பமானதாக இருந்தாலும் அதன் முடிவு ஒன்றுமற்றதாக இருக்கின்றது. சுகபோகங்களில் இருப்பதன் விளைவாக இறுதியில் இறைவனோடு உள்ள உறவு முறிந்து விடுகிறது. இறைவனது நேசம் சோதனையில் ஆழ்த்துவதேயாகும். அதன் மூலம் தனது அடியாரின் மகத்துவத்தை அவன் வெளிப்படுத்திக் காட்டுகின்றான்.

உதாரணமாக கிஸ்ரா மன்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கைது செய்யும்படி உத்தரவு பிறப்பிக்காமல் இருந்திருந்தால் அவன் அதே இரவில் கொல்லப்படும் அந்த அற்புதம் எப்படி நிகழ்ந்திருக்க முடியும்?

மக்காவிலுள்ள மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை மக்காவை விட்டும் வெளியேற்றாமல் இருந்திருந்தால் பிறகு *ஃபத்தஹ்னாலக ஃபத்ஹம் முபீனா - நாம் உமக்கு மிகத் தெளிவான ஒரு வெற்றியினை வழங்கினோம் (48:2)* என்ற குரல் எப்படி கேட்டிருக்க முடியும்? ஒவ்வொரு அற்புதமும் சோதனையுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. கவனமின்மை மற்றும் இன்பங்கள் நிறைந்த வாழ்க்கைக்கு இறைவனுடன் எந்தத் தொடர்பும் இல்லை.

வெற்றிகளுக்கு மேல் வெற்றி கிடைத்துக் கொண்டிருந்தால் மன்றாடுதல், இறைவனுக்காக உலகத்திலிருந்து துண்டிக்கப்பட்ட நிலை ஆகியவற்றால் ஏற்படும் இறை தொடர்பு நிலைத்திருக்காது. அல்லாஹ் இதையே விரும்புகின்றான். எனவே, வேதனை நிறைந்த நிலைமை உருவாவது அவசியமானதாகும்.

அல்லாஹ் நமது எல்லாரது ஈமானிலும் முன்னேற்றத்தை வழங்குவானாக! முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டே இருப்பானாக! மேலும் நமக்கு வெற்றி மற்றும் அவனது உதவியின் காட்சிகளையும் விரைவாக காட்டுவானாக! இந்த தியாகங்களை ஏற்றுக் கொள்வானாக! ஷஹீது மர்ஹூமின் தகுதியை மேலும் மேலும் உயர்த்திக் கொண்டே இருப்பானாக!

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் இந்த ஷஹீதிற்கான ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன். இவரைப் பற்றிய சுருக்கமான விபரத்தையும் கூறி விடுகின்றேன்.

இவரது தந்தையார் பெயர் மியான் முபாரக் அஹ்மத சாஹிப் ஆகும். இவர் சியால்கோட்டைச் சேர்ந்தவர். இவர்களது குடும்பத்தில் அஹ்மதிய்யத் பிரவேசித்தது இவரது கொள்ளுதாத்தாவான மதிப்பிற்குரிய அஹ்மது யார் சாஹிப் (ரலி) அவர்கள் மூலமேயாகும். இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கைகளில் பைஅத் செய்திருந்தார்கள். அதனால் சஹாபி என்று அழைக்கப்பட்டார். இவ்வாறே அவரது கொள்ளுப்பாட்டியான மதிப்பிற்குரிய மெஹ்தாப் பீபி சாஹிபா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபியாவாக இருந்தார்கள். மாஸ்டர் அப்துல் குத்தூஸ் சாஹிப் அவர்கள் 1968 ஆம்

ஆண்டு பிறந்தார்கள். பிறப்பால் அஹ்மதியாக இருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் அவர்கள் மூஸியாக இருந்தார்கள். ஷஹாதத்தின்போது அவர்களுக்கு வயது 43 ஆகும். அவர்கள் F.A. வரை கல்வி கற்றார்கள். T.T.C.-ன் கோர்ஸை படித்து முடித்தார்கள். ஆசிரியராக பணியாற்றினார்கள். மாஸ்டர் சாஹிப் ஷஹீது அவர்களின் திருமணம் 1997-ல் குஜ்ரான்வாலாவின் அமீராக இருந்த மாஸ்டர் பஷாரத் சாஹிபின் மகளான ரூபினா குத்தூஸ் சாஹிபுடன் நடந்தது. நான் ஏற்கனவே கூறியதைப் போன்று அவர் பள்ளிக்கூட ஆசிரியராக இருந்து வந்தார். அரசாங்கப் பணியில் ஆசிரியராக 20 வருடங்கள் வரை அவர்கள் பணியாற்றியுள்ளார்கள். ரப்வாவில் தாருஸ் ஸிமாலியில் இவர் ஆசிரியராக இருந்து வந்தார். அவர்களோடு பணியாற்றிய ஆசிரியர்களின் கூற்றின்படி அவர்கள் மிகவும் கடினமாக உழைக்கக்கூடிய நேர்மையான ஆசிரியர்களில் ஒருவராக இருந்து வந்தார். நுஸ்ரத் ஆபாத் முஹல்லாவில் வசிப்பதற்கு முன்பு அவர்கள் முஹல்லா தாரூர் ரஹ்மத் ஸர்கியில் வசித்து வந்தார்கள். முஹல்லா தாரூர் ரஹ்மத் ஸர்க்பால் அவர்கள் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவில் அவர் இருந்த காலத்தில் மஜ்லிஸின் பணிகளில் அதிகமாக பங்கேற்கும் தவ்ஃபீக் அவர்களுக்கு கிடைத்தது. அவர்கள் ஐந்தாம் வகுப்பு படிக்கும் போதே ஜமாஅத் தொண்டுகளைச் செய்து வந்தார்கள். மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவில் முஹ்தமிம் அத்ஃபால் ஆகவும் அதற்குப் பிறகு பத்து வருடங்கள் வரை ஹல்கா ஸயீம் என்ற பொறுப்பிலும் இருந்து வந்தார்கள். 1996ம் ஆண்டில் நுஸ்ரத் ஆபாதிற்கு வந்த பிறகும் உடனடியாக ஜமாஅத் பணிகளில் ஈடுபட்டு வந்தார்கள். நுஸ்ரத் ஆபாத் முஹல்லாவில் ஹல்காவின் ஸயீம் ஆகவும் மஜ்லிஸே ஸிஹத் அதாவது உடல் ஆரோக்கியம் தொடர்பான துறையில் கிஸ்திராணி என்ற துறையின் இன்சார்ஜ் ஆக இருந்தார்கள். படகை ஓட்டுவது, நீச்சல் ஆகியவை இவருக்கு நன்றாகத் தெரியும். இரண்டரை வருடங்களுக்கு முன்னால் முஹல்லாவின் சதர் ஆக இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். முஹல்லாவின் சதர் என்ற நிலையில் மிகவும் சிறந்த முறையில் தொண்டுகளை செய்து வந்தார். அவர்களது முஹல்லாவிலுள்ள சகோதரர்கள் கூறுவதற்கிணங்க ஷஹீது மர்ஹூம் மிக அதிகமாக நல்ல முறையில் பரிமாறக் கூடியராகவும் மிக அதிகமாக தைரியத்தை கைக்கொள்பவராகவும் இருந்தார். இவருடன் ஏதாவது நபர் கடுமையான தொணியில் பேசினால் அவர் அந்த விஷயத்தை சிரித்தவாறே தட்டிக்கழித்து விடுவார். ஒவ்வொரு பொறுப்பாளரும் இதே விதமாக மற்றவருடன் பரிமாற வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவர்களுக்கு மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவில் தலைமையகத்தை பாதுகாக்கும் பணியில் ஒரு நீண்ட காலம் தொண்டாற்றக்கூடிய தவ்ஃபீக் கிடைத்தது. 2002 ஆம் ஆண்டிலிருந்து ஷஹீதாகும் நாள் வரை தலைமையகத்தை பாதுகாக்கும் பணியில் உலூம் பேயின் இன்சார்ஜ் ஆக இருந்தார்கள். டியூட்டி கொடுக்கின்ற ஒவ்வொருவரிடமும் பணியில் இருக்கின்ற ஒவ்வொருவரிடமும் மிகவும் அன்புடன் நடந்து கொள்வார்கள். அவர்களுக்கு சாப்பிடுவது குடிப்பது ஆகியவற்றிற்கான ஏற்பாட்டை செய்வது மிக நீண்ட நேரம் டியூட்டி கொடுக்க வேண்டியது வந்தால் தாமாகவே அவர்களுக்கு தேநீர் அருந்தக் கொடுத்து வந்தார்கள். குத்தாம்கள் இவருடன் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். மாஸ்டர் அப்துல் குத்தூஸ் சாஹிப் ஷஹீது மிகச்சிறந்த மகிழ்ச்சியான இயல்பின் எஜமானராகத் திகழ்ந்தார்கள்.

பொதுத்தொண்டுப் பணிகளைச் செய்வதால் பைத்தியக்காரர் போன்று மிகுந்த ஆர்வமுடையவராக இருந்தார். சணாப் நதியில் யாராவது மூழ்கி விட்டால் அஹ்மதி, அஹ்மதி அல்லாதவர் என்ற எந்த பேதமும் இல்லாமல் அந்த சடலத்தை தேடுவதில் இரவு பகலாக உழைப்பார்கள். அந்த சடலத்தை கண்டுபிடிக்காத வரை அவர்கள் அமைதியாக இருக்கமாட்டார்கள். சிறு வயதிலிருந்து வஃபாத் ஆகும் வரை ஜமாஅத்தின் பல்வேறு தொண்டுகளில் ஈடுபடுகின்ற நற்பாக்கியம் இவருக்கு கிடைத்தது. ஷஹீது மர்ஹூம் கட்டுப்படுதல் மற்றும் கீழ்படிதலின் ஒரு முன்மாதிரியாக திகழ்ந்தார்கள். ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கு கண்ணியமளிப்பதை மிக அதிகமாக கருத்தில் கொள்பவராக அவர் இருந்தார். மாணவராக இருந்த காலத்திலேயே இவருக்கு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் இருந்து வந்தது. கபாடி, ஹாக்கி, கிரிக்கெட் போன்றவற்றில் கிஸ்தி ராணியின சிறந்த விளையாட்டு வீரராக இவர் இருந்தார். டியூட்டி கொடுக்கும்போது நான் இவரை பார்த்திருக்கின்றேன். என்னுடன் சேர்ந்து இவர் டியூட்டி கொடுத்துள்ளார். ஒருபோதும் பெருமையாக முன்னால் வந்து நின்று டியூட்டி கொடுப்பதில் அவருக்கு ஆர்வம் இருந்ததில்லை. இன்சார்ஜ்

ஆக இருந்தும் கூட சிலருக்கு பெருமையாக முன்னால் வந்து பணியாற்றுவதில் ஆர்வம் இருக்கும். ஆனால் இவரோ பின்னால் இருந்தவாறு தனக்கு கீழ் பணிபுரிபவர்களை முன்னால் இருக்கும்படி செய்வார்கள். இவர் ஜாமிஆவில் சென்று படிக்க வேண்டும் என்று இவரது தாயார் விரும்பினார்கள். ஆனால் அவர்களது இந்த விருப்பம் நிறைவேறவில்லை.

மர்ஹூமின் மனைவி கூறுகின்றார்கள்: மிக நல்ல முறையில் பரிமாறுவார்கள. எல்லாரையும் நேசிக்கின்ற அனுதாப உணர்வுள்ள மனிதராக அவர்கள் இருந்தார்கள். எங்கள் எல்லாரையும் நல்ல முறையில் கவனித்து வந்தார்கள். ஒருபோதும் கடினமாக பரிமாறியதில்லை. ஷஹீதாவதற்கு ஒரு நாள் முன்பு பிள்ளைகளுக்கு பொறுமை, தைரியம், கிலாஃபத்துடன் உள்ள தொடர்பு பற்றி வலியுறுத்திக் கூறி வந்தார்கள். இந்தப் பண்புகள் இவரது தலைமுறையில் தொடர்ந்து நீடிக்கும்படி அல்லாஹ் செய்வானாக! இவரது மனைவி எனக்கு எழுதிய கடிதத்தில் எனது கணவர் பெரும்பாலும் என்னிடம் எனது தாயாரையும், எனது பிள்ளைகளையும் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும் என்றே போதித்து வந்தார்கள். தமது இறுதி நொடிகளில்கூட இதைத்தான் அவர்கள் கூறினார்கள். இந்த விஷயங்கள் அவரது மனைவிக்கு எப்போதும் நினைவில் வந்து கொண்டிருக்கும்.

ரப்வா வாசிகளான நாமும் குத்தூஸ் சாஹிபிடம் இந்த வாக்குறுதியை வழங்க வேண்டும். நாம் நம்மீது அவர் செய்துள்ள நன்மைகளை மறந்தவர்கள் அல்ல. அவர் ஜமாஅத் மீது பேருபகாரம் புரிந்துள்ளார். அப்படிப்பட்ட நன்மை செய்பவர்களை ஜமாஅத் ஒருபோதும் மறக்காது. நமக்கு இவை எப்போதும் நினைவில் இருக்கும். போனிலும் நான் அவருடன் பேசினேன். இவரது வயது முதிர்ந்த தாயாருடனும் நான் பேசினேன். உறுதியான எண்ணம் கொண்டவராக அவர் இருக்கின்றார். அவரது குழந்தைகளுடனும் நான் பேசினேன். அவர்கள் தங்களது துக்கத்தை பொருட்படுத்தாமல் என்னை பற்றி விசாரித்தார்கள். அவரது மனைவியுடனும் நான் பேசினேன். அவர்களும் மிகுந்த பொறுமையை மேற்கொள்பவராகவும் நன்றி தெரிவிப்பவராகவும் இருந்தார்கள். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் பொறுமையை மேற்கொள்வதற்கான தவ்ஃபீக்கை வழங்குவானாக! அவனே இவர்களது பாதுகாவலனாகவும் இவர்களுக்கு உதவி செய்பவனாகவும் இருப்பானாக! இவர்களுக்கு வயது முதிர்ந்த பெற்றோர்கள் இருக்கின்றார்கள். இவரது தந்தையார் இங்கு ஹாலந்தில் இருக்கின்றார். ஆனால் தாயார் அங்கு இருக்கின்றார். குத்தூஸ் சாஹிபுடன் அவர் இருந்து வந்தார். இவரது மனைவியை தவிர இவருக்கு ஒரு மகன் இருக்கின்றார். அவருக்கு வயது 14. இவரது பெயர் அப்துஸ் ஸலாம். இவர் 8வது வகுப்பு மாணவராவார். இன்னொரு மகன் அப்துல் பாஸித் ஆவார். இவருக்கு வயது 13. இவர் 7வது வகுப்பில் படிக்கின்றார். அப்துல் வஹ்ஹாப் என்ற இன்னொரு மகன் இருக்கின்றார். இவருக்கு 5 வயது ஆகிறது. இவர் முதலாவது வகுப்பில் படிக்கின்றார். ஒரு மகள் அத்தியத்துல் குத்தூஸ் ஆவாள். இவருக்கு 10 வயது ஆகிறது. நான்காவது வகுப்பில் படிக்கின்றார். அல்லாஹ் இந்த எல்லா குழந்தைகளின் பாதுகாவலனாகவும் அவர்களுக்கு உதவி செய்பவனாகவும் இருப்பானாக!

இப்போது ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு இவரது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 06.04.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456